**27.02.2020.**

O.S.No. 92/2019

வா.சா.1.

திரு. உமைய பார்வதி, தகப்பனார் பெயர். கிருபா சந்திரன் , கணவர். பச்சையப்பன்.

வயது. 72

குறுக்கு விசாரணை =

என் நீதிமன்ற பிரமாண வாக்குமூலத்தில் உள்ள வீடு நானே என் சொந்த பணத்தில் வாங்கியது. எனக்கும் பிரதிவாதிக்கும் 1965 ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். திருமணத்தின் போது கட்டில் ,பீரோ, சாமான்கள் அனைத்தும் என்க்கு சீராக கொடுத்தார்கள். என் கணவருக்கு என்னை திருமணம் செய்த போது எனது கணவர் திருமுல்லைவாயிலில் பவர் ஃஷ்டேசனில் நிரந்தர பணியில் இருந்தார். அப்போது அவருக்கு மாதம் ரூ.250 சம்பளம். 1965ல் ரூ 250 சம்பளம் என்றால் சரி. தற்போது அதன் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. என் கணவர் திருமணத்திற்கு முன்பு என்ன படித்திருந்தார் என்று எனக்கு தெரியாது். என் கணவர் தொழிளாலர் மற்றும் வேலைவாய்ப்பு துறையில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இயக்குனர் அலுவலகத்தில் 1959ல் டிரைனிங் முடித்து டிப்பளமோ சட்விகேட் வாங்கியுள்ளார் என்றாலும் சட்விகேட் இது என்றாலும் சரி. அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது. அது பி.சா.ஆ. 1.ஆகும். என் திருமணத்தின் போது நிறைய பொருட்கள் கொடுத்தார்கள் என் தந்தை என்ன வேலை செய்தார் என்றால் வெள்ளி பட்டறை வைத்திருந்தார். என் தந்தை வெள்ளி பட்டறையில் அப்போது எப்படி வேலை வருகிறதோ அப்படி வேலை செய்வார். என் கணவர் முதலில் எலெக்ரிஷனாகவும் அதன் பிறகு 1994 ல் போர்மேனாக பதவி உயர்வு வந்தது. போர்மேனாக ஆனபோது என் கணவருக்கு என்ன சம்பளம் என்றால் எனக்கு தெரியாது. இந்த வீட்டை ரூ 7000/= திருநாவுக்கரசு இடம் வாங்கினேன் , எந்த வருடம் என்பது ஞாபகம் இல்லை. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்று ஞாபகம் இல்லை. வீடு வாங்கும் போது 12 வாடகை தாரர்கள் அதில் இருந்தார்கள். 4 கடைகள் உள்ளது நாங்களே வைத்துள்ளோம். இந்த 4 கடைகளில் 2 கடைகளுக்கு என்னை வாடகை வாங்க கூறிவிட்டார் என்றால் கடந்த 2

மாதங்களாக தான் அவ்வாறு வாங்கி கொண்டிறுக்கிறேன். நானும் திருமணம் ஆகாத என் மகன் 52 கோபிநாதனும் வசித்து வருகிறோம். என் கணவர் என்னை 47 ஆண்டுகளாக பிரிந்திருக்கிறார். நான் அனுப்பவில்லை அவரே தான் பிரிந்து சென்றுவிட்டார். என் பெரிய மருமகன் பெயர் குணசேகரன். 2018 அக்டோபர் மாதத்தில் இருந்து தான் எங்களுக்குல் பிரச்சனை ஏற்பட்டது என்று நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன். எண் 326, எ.பி 26 , கம்பர் குடியிருப்பு, அண்ணா நகர் மேற்கு சென்னை என்ற இடத்தை என் கணவர் அவர் சொந்த பணத்தைக்கொண்டு வாங்கியுள்ளார் என்றால் சரி. இந்த வீட்டை விற்று அந்தந்த பாகத்தை அந்தந்த பிள்ளைகளுக்கு கொடுத்து விடுங்கள் என்று என் கணவர் தான் கூறினார். இந்த வீடு விற்ற போது 40 லட்சத்திற்கு விலை பேசி 16 லட்சத்திற்கு வரைவோலையாக (டிடி) கொடுத்தார் . மீதி தொகையை ரோக்கமாக கொடுத்தார். அந்த தொகையில் 23 லட்சத்து 50 ஆயிரத்தை என் கணவரிடம் இருந்து என் மருமகன் குணசேகரன் பெற்று அதை என்னுடைய மகள்கள் ராணி , சந்திரா, வடிவு இந்த 3 பேரும் சேர்ந்து தனித்தனி பிளாட்டுகளாக ஆவடியில் வாங்கினார்கள் என்றால் சரி. 3 வது பிளாட்டை மட்டும் என் கணவர் பெயரில் தான் வாங்கினார்கள் என்றால் சரி. அந்த 3 வது பிளாட்டை தான் தற்போது இருக்கும் வீட்டின் முதல் தளத்தை கட்டினார் என்றால் சரி. அரைகுறையாக கட்டினார். அந்த இடத்தில் தான் நானும் என் மகன் கோபிநாதனும் இருக்கிறோம். எனது மகள் வடிவு அவர் திருமணத்திற்கு பிறகு காக்களூரில் அவர் அப்பா பெயரில் வாங்கி அப்பாவிற்கு கொடுக்காமல் விற்றுவிட்டார்கள் என்றால் சரி. சந்திரா அவர் வாங்கிய சொத்தை விற்றுவிட்டார். அண்ணா நகரில் வாங்கிய 40 லட்சம் பெருமாணம் உள்ள பிளாட்டை விற்று அதில் வந்த பணத்தை கொண்டு வாங்கிய பிளாட்டுகளில் பிரதிவாதிக்கு கொடுப்பதாக சொல்லப்பட்ட பிளாட்டுகளையும் என் பிள்ளைகளே விற்று எடுத்து கொண்டார்கள் என்றால் சரி. நாங்கள் அவர் சொத்தை எடுத்து கொண்டு அவரை வெளியேற்றி விட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் இருக்கும் வீட்டான தாவா சொத்தை 1973ல் வாங்கும் போது என் அப்பா கொடுத்த பணத்தை வைத்து என் கணவர் பெயரில் வாங்கினேன் என்று அக்கிரிமேன்ட்டிலோ கிரையபத்திரத்திலோ சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. என் பெயரில் எழுதிய இடத்தை என் கணவர் பெயரில் எழுதிகொண்டார். என் பெயரில் எழுதுவதற்கு பதிலாக என் கணவர் பெயரில் எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு ஏமாற்றி விட்டார்கள் என்று போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தற்போது தான்

தெரியவந்தது. என் கணவர் அரசு உழியர் என்றால் சரி. நான் சொன்ன 1973ல் பத்திரம் ஆவண எண் 2802/1973 ல் நான் தற்சமயம் குடியிருக்கும் வீட்டை 47 ஆண்டுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியேறிய என் கணவர் 1973ல் தாவா சொத்தை அவர் பெயரில் அவருடைய சொந்த சம்பாத்தியதில் வாங்கியதை நான் என் பிள்ளை , என் மருமகன் ஆகியோர் சேர்ந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வீட்டை அபகரித்து வைத்து கொண்டு அசல் ஆவணம் நாங்களே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் அதை பெற்று தரும் படியும் மேலும் பிரதிவாதியானவர் தேடிபார்த்து கிடைக்க வில்லை என்று ஒரு பொய்யான புகார் கொடுக்க போகிறார் என்று என் கணவருக்கு எதிராக ஒரு குற்ற சாட்டை வைத்து கொரட்டூர் காவல் நிலையத்தில் நவம்பர் மாதம் 2018ல் நாங்கள் புகார் கொடுக்க சென்ற போது காவல் நிலையத்தில் போலிசார் பிரதிவாதியை அழைத்து மனைவியிடம் தானே பத்திரம் உள்ளது ஏன் பிரச்சனை செய்கிறிர்கள் சமாதானமாக போங்கள் புத்திமதி சொன்னார்கள் என்றால் சரி. அதே போல் மறுபடியும் பத்திரத்தை நாங்களே வைத்துக்கொண்டு அவரை வீட்டில் சேர்த்துகொள்ள வில்லை எனறு கமிஷ்னர் அலுவலகத்தில் புகார் எண் 306/COP/ Visitors /08.02.2019 அன்று அனுகி உள்ளார்கள் என்று சொன்னால் சரி. அதை தொடர்ந்து அம்பத்தூர் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். தாவா வீடு சம்மந்தப்பட்ட பத்திரம் ஆவணம் வா.சா.ஆ 2 தான். அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு வரை எங்கள் வீட்டில் தான் இருந்தது. என் கணவர் மாதாமாதம் வெறும் ரூ. 4000/= தான் தருவார். அதுவும் 1 1/2 வருடமாக தரவில்லை. என் கணவர் தற்போதும் பென்ஷன் வாங்கி கொண்டிருக்கிறார். 4 கடையில் 2 கடை வாடகையை வாங்குகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது 2 மாதமாகதான் வாடகைக்கு வந்தார்கள். இதுவரை என் கணவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்கள் அனைத்தும் பத்திரத்தை வாங்கிவைத்து கொண்டு வீட்டை விட்டு துறத்திவிட்டார்கள் என்றும் என்னுடைய வீட்டு பத்திரத்தை பெற்று தாறுங்கள் என்றுதான் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் நான் அவரை வீட்டை விட்டு நான் துறத்தவில்லை. ஆனால் பத்திரம் பெற்று தாருங்கள் என்று புகார் கொடுத்தார் என்றால் சரி. என் தந்தை சில்வர் சாமன்களில் பெயர் போடும் வேலை பார்த்தார் என்றால் சரி. நான் 1973ல் நான் வீடு வாங்கியதற்கு பணம் எவ்வாறு திரட்டினேன் என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரி. எனது கணவர் அரசு உழியர், வெல்டர். போர்மேன் , எலேக்ரிஷன் என்பதால் அவரால் பணம் திரட்ட முடியும் என்றால் எனக்கு தெரியாது. நான் வீட்டை அபகரித்து விடலாம் என்ற எண்ணத்தில் வீட்டை விட்டு துரத்தி விட்டு வீட்டு பத்திரத்தை அவரிடம் இருந்து பிடுங்கி வைத்து கொண்டு சொத்தை அவருக்கு இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காக என் அப்பா பணம் கொடுத்ததாகவும் கொடுத்த பணத்தில் அவர் பெயரில் வாங்கிகொண்டதாகவும் இந்த வீட்டை நான் எடுத்து கொள்ள வேண்டும்என்ற ஒரே நோக்கத்தில் தான் அந்த வீட்டு பத்திரத்தை நான் வைத்து கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தின் உரிமையாளர் பிரதிவாதி தான் என்றாலும் உரிமையாளர் என்ற முறையில் அந்த சொத்தில் நுழைவதற்கும் வசிப்பதற்கும் உரிமையுள்ளவர் என்றாலும் எனவே நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்து இந்த சொத்தை புடிங்கி கொள்ள வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.